முதுகலை முதலாமாண்டு - தமிழ் இலக்கியம்

தொல்காப்பியம் - சொல்லதிகாரம் : இரண்டாம் பருவம்

பாடக்குறியீட்டு எண் : 18MTA22C

அலகு : 2 : 3. வேற்றுமை மயங்கியல்

4. விளி மரபு

முனைவர். ந. மகாலட்சுமி
உதவிப் பேராசிரியர்.

# 3. வேற்றுமை மயங்கியல்

வேற்றுமை மயக்கம், பொருள் மயக்கம், உருபு மயக்கம் என இரு வகைப்படும். ஒரு வேற்றுமை உருபு தனது பொருளோடு, வேறொரு வேற்றுமைப் பொருளிலும் பொருந்தி நின்று பொருள் தந்தால் அது பொருள் மயக்கம். ஒரு பொருளில் இரண்டு உருபுகள் சென்று பொருந்தினாலும் பொருள் மயக்கம் என்றே கொள்ளப்படும்.

ஓர் உருபு நிற்க வேண்டிய இடத்தில் வேறொரு உருபு பொருத்தமின்றி நின்றால் [நிற்க வேண்டிய வேற்றுமையின் பொருளைத் தரும்] அது உருபு மயக்கம் எனப்படும். இவ்வாறு வகையாலும் நிகழும் வேற்றுமை மயக்கத்தினை இவ்வியல் விளக்குகிறது.

## 1. பொருள் மயக்கம்:

### ஐயும் கண்ணும் மயங்குதல்:

- கருமம் அல்லாத சார்புப் பொருளுக்கு உரியது இரண்டாம் வேற்றுமை. அதற்கு ஏழாம் வேற்றுமையும் வரும். (எ.கா) அரசனைச் சார்ந்தான் - அரசன்கண் சார்ந்தான்
- உறுப்பினைக் குறித்து வரும் சினைச்சொல் வினை முடிவினை ஏற்கும் போது இரண்டாம் வேற்றுமையும் (ஐ), ஏழாம் வேற்றுமையும் (கண்) ஒத்து வரும். (எ.கா) கிளையை வெட்டினான், கிளையின் கண் வெட்டினான்.
- கன்றல் (வெறுதல்), செலவு (பயணம்) எனும் பொருட்களில் வரும் சொற்கள் இரண்டாம் வேற்றுமை உருபையும் ஏழாம் வேற்றுமை உருபையும் பெறும். (எ.கா) சூதினைக் கன்றினான், சூதின்கண் கன்றினான், நெறியைச் சென்றான் - நெறியின்கண் சென்றான்.

### முதல் சினைப் பெயர்களின் மயங்கும் வேற்றுமை:

முதற்பொருளும் சினைப்பொருளும் தொடர்ந்து நிற்பது முதற்சினைப் பொருளாகும்.

1. முதற்பொருளுக்கு ஆறாம் வேற்றுமை உருபு (அது) வந்தால் சினைக்கு இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ) வரும். (எ.கா) யானையது துதிக்கையை வெட்டினான்.
2. முதற்சொல்லுக்கு இரண்டாம் வேற்றுமை (ஐ) வந்தால் சினைக்கு ஏழாம் வேற்றுமை (கண்) வரும். (எ.கா) யானையை கோட்டின்கண் வெட்டினான்.
3. முதல் சினை என்பனவற்றை வரையறுத்துக் கூறுவது இயலாது. சொல்பவரின் குறிப்பினால் எது முதல், எது சினை என்பது தெளியப்படும்.
4. பல பொருள்கள் அடங்கிய தொகுதி பண்டமாகும். பண்டப் பெயரை முதல், சினைப் பெயருக்குரிய இலக்கணத்தின்படியே கூறுதல் வேண்டும். அவற்றை முதலும் சினையுமாக வழங்குதல் மரபாகும்.

(எ.கா) குப்பையது தலையைச் சிதறினான், குப்பையை தலைக்கண் சிதறினான்.

## ஒடு உருபு நிற்குமிடம் :

ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் ஒருவினையைப் பெற்று வருவது ஒருவினைக்கிழவி எனப்படும். அவ்வாறு வரும் போது உயர்ந்த பொருளை உணர்த்தும் சொல்லின் பின்னர் 'ஒடு' உருபு சேர்த்துக் கூற வேண்டும்.
(எ.கா) ஆசிரியரொடு மாணவர் வந்தார், அரசரொடு அமைச்சர் வந்தார்.

## ஏதுப் பொருளில் மயங்கல் :

இதனால் இது ஆயிற்று என்பது ஆக்கத்தோடு கூடிய காரணச் சொல்லாகும். இதற்கு மூன்றாம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை ஆகிய இரு உருபுகளும் ஒத்த பொருளை உடையன.
(எ.கா) வாணிகத்தால் செல்வந்தன் ஆயினான் (ஆல்)
வாணிகத்தின் செல்வந்தன் ஆயினான் (இன்)

## நோக்கல் பொருளின் மயக்கம் :

நோக்கு இருவகைப்படும். 1. நோக்கிய நோக்கம் - கண்ணால் ஒன்றை நோக்குவது. 2. நோக்கல் நோக்கம் - மனத்தால் ஒன்றை நோக்குவது.

நோக்கல் நோக்கமாகிய இரண்டாம் வேற்றுமைக்குரிய பொருள் மூன்றாம் வேற்றுமைக்கும், ஐந்தாம் வேற்றுமைக்கும் உரிய ஏதுப்பொருளிலும் வரும்.
(எ.கா)

வான் நோக்கி
- → வானை நோக்கி (ஐ)
- → வானால் நோக்கி (ஆல்)
- → வானின் நோக்கி (இன்)

கோல் நோக்கி
- → கோலை நோக்கி (ஐ)
- → கோலால் நோக்கி (ஆல்)
- → கோலின் நோக்கி (இன்)

## ஆறாம் வேற்றுமை உயர்திணைத் தொகையில் உருபு மயக்கம் :

உயர்திணையில் ஆறாம் வேற்றுமை உருபு (அது) மறைந்து வரும் தொகைச் சொற்கள் உண்டு. அதை விரித்துக் கூறும் போது 'அது' என்பதை விடுத்து 'கு' எனும் நான்காம் வேற்றுமை உருபால் கூற வேண்டும்.
(எ.கா) நம்பி மகன் → நம்பியது மகன் → நம்பிக்கு மகன்.

## தடுமாறு தொழிற் பெயரில் வரும் மயக்கம் :

முன்னும் பின்னும் பெயர்ச்சொல் வர, இடையில் வினைச்சொல் வந்தால் பொருள் கொள்வதில் தடுமாற்றத்தைத் தரும். இது தடுமாறு தொழிற்பெயர் எனப்படும். இவ்வாறு நிற்கும் தொடரில் இரண்டாம் (ஐ), மூன்றாம் (ஆல்) வேற்றுமைகள் மயங்கி வரும்.
(எ.கா) புலியைக் கொன்ற யானை, புலியால் கொல்லப்பட்ட யானை.

தடுமாறு தொழிற் பெயரில் இருபெயர் நிற்கும் பெயரோடு பொருள் வேறுபாட்டை அறிவதற்குரிய சொல் வரும். அதைக் கொண்டு தடுமாற்றத்தைப் போக்கிக் குறிப்பால் பொருளை உணர்வர்.

(எ.கா) புலியைக் கொன்ற யானை ஓடியது. புலியால் கொல்லப்பட்ட யானை கிடந்தது.

ஓம்படை கிளவியால் மயங்குதல்:

பாதுகாத்தல் என்னும் பொருளைத் தருகின்ற சொல் ஓம்படைக்கிளவி எனப்படும். அத்தொகைச் சொல், இரண்டாம்(ஐ), மூன்றாம் (ஆல்) வேற்றுமை உருபுகளைக் கொண்டு விரித்துப் பொருள் கொள்ளப்படும்.

(எ.கா)

புலி போற்றி வா → புலியைப் போற்றி வா.
→ புலியால் போற்றி வா.

வாழ்ச்சிக் கிழமையால் மயங்குதல்:

ஆறாம் வேற்றுமைக்குரிய வாழ்ச்சிக் கிழமை, வாழும் இடத்தின் உரிமை காரணமாக ஏழாம் வேற்றுமை உருபையும் பெற்று வரும்.

(எ.கா) காட்டு யானை → காட்டது யானை (அது)
→ காட்டின்கண் யானை (கண்)

கொடைப் பொருளில் அது உருபு:

கொடைப்பொருளை உணர்த்தும் நான்காம் வேற்றுமைத்தொகைச்சொல் விரித்துப் பொருள் கொள்ளும் போது ஆறாம் வேற்றுமை உருபையும் ஏற்கும்.

(எ.கா)

நாகர் பலி → நாகர்க்கு நேர்ந்த பலி (கு)
→ நாகரது பலி (அது).

அச்சப் பொருளில் மயக்கம்:

அச்சப் பொருள் ஐந்தாம் வேற்றுமைக்கும் இரண்டாம் வேற்றுமைக்கும் உரியது. அச்சம் பற்றிய தொகைச்சொல்லை அவ் இரு வேற்றுமைகளைக் கொண்டும் விரிக்கலாம். அவை ஒரே உரிமையுடையன.

(எ.கா)

பழியஞ்சும் → பழியின் அஞ்சும் (இன்)
→ பழியை அஞ்சும் (ஐ)

மேல் வேற்றுமை மயக்கம் கூறப்பட்ட வேற்றுமையே அன்றி அவை போல்வன பிறவும், தொன்று தொட்டு வரும் வழக்கிற் பிழையாது. அவை உருபாலும், பொருளாலும் ஒன்று நிற்க வேண்டிய இடத்தில் வேறொன்று நின்று, தன் பொருளையும், பிறிதொன்றின் பொருளையும் தருவது உண்டு. ஆராய்ந்து உணர்பவர்களுக்கு இது மாறுபாடு உடையது அல்ல.

(எ.கா) சாத்தனை வெகுண்டான் – சாத்தனொடு வெகுண்டான்.
கடலொடு காடு ஒட்டாது – கடலைக் காடு ஒட்டாது.

**உருபுகள் தொடர்ந்து அடுக்கி வருதல் :**

ஒரு தொடரில் உருபுகள் பல அடுக்கி வருவதுண்டு. அத்தகைய சொற்கள் பொருள் வேறுபடாமல் இருக்குமெனில், பொருத்தமான ஒரு சொல்லைக் கொண்டு முடிக்கப்படும்.

(எ.கா) என்னையும் நின்னையும் ஆதரது.

யானையது கோட்டை நுனிக்கண் வாளால் வெட்டினான்.

**உருபுகள் விரிந்து நிற்றல் :**

ஐ முதல் கண் ஈறாக கூறப்பட்ட ஆறு உருபுகளும் வேற்றுமைத் தொடரின் இடையிலும் இறுதியிலும் தமக்குரிய பொருளில் வரும் அதனை நீங்காமல் ஏற்றுக் கொள்வர். (எ.கா) ஐ < நிலத்தைக் கடந்தான் – இடையில்
கடந்தான் நிலத்தை – இறுதியில்.

**உருபு மற்றொன்றனை ஏற்றலும் தொகையும் :**

ஓர் உருபு பிறிதோர் உருபை ஏற்று வருவதும், ஆறு உருபுகளும் (ஐ முதல் கண் வரை) மறைந்து வருவதும் ஆகிய இவை இரண்டும் தொன்று தொட்டு வழங்கி வருபவை.

(எ.கா) சாத்தன் + அது = சாத்தனது (அது எனும் உருபைப் பெற்றது)

நிலம் + ஐ + கடந்தான் = நிலங்கடந்தான் (ஐ உருபு மறைந்து வந்தது)

**தொடர்மொழி இறுதியில் தொக்கும் தொகா உருபுகள் :**

ஐ, கண் எனும் இரண்டு உருபுகளும் தொடர் மொழிகளின் இறுதியில் மறைந்து வரும் (தொக்கும்). ஏனைய உருபுகள் (ஆல், கு, இன், அது) மறைந்து வருவதில்லை (தொகா).

(எ.கா). கடந்தான் நிலம் → கடந்தான் நிலத்தை – ஐ

இருந்தான் குன்றத்து → இருந்தான் குன்றத்தின்கண் – கண்.

## 2. உருபு மயக்கம்

தொடர் மொழிகளில் ஒரு வேற்றுமை உருபு வரவேண்டிய இடத்தில் மற்றொரு வேற்றுமை உருபு வரும். அதனாலும் வந்த உருபான் பொருள் கூறப்படாமல் வரவேண்டிய வேற்றுமை உருபைக் கொண்டே பொருள் வாசிக்கப்படும்.

(எ.கா) இளையரி நாணற்கிழங்கு மணற்கு ஈன்ற

## எதிர்மறையில் வேற்றுமை வரும் நிலை:

வேற்றுமைத் தொடர்கள் உடன்பாட்டில் மட்டுமல்லாமல் எதிர்மறையானும் கூறப்படும். அப்போதும் அவ்வேற்றுமை உருபுகள் தமக்குக் கூறப்பட்ட பொருள்களிலிருந்து மாறுபடாமல் நிற்கும்.

(எ.கா) மரத்தைக் குறையான் (எதிர்மறை), மரத்தைக் குறைத்தான் (உடன்பாடு)

## செய்யுளில் உருபுகள் திரிதல்:

கு, ஐ, ஆன் எனும் உருபுகள் செய்யுளில் தொடர்மொழிகளின் இறுதியில் வரும் போது 'அ' கரத்தோடு பொருந்தி நிற்கும்.

(எ.கா) கடிநிலை இன்றே ஆசிரியற்கு -(ஆசிரியற்கு)
காவலோனக் களிறு அஞ்சும்மே -(காவலோனை)
புரைதீர் கேள்வப் புலவரான -(புலவரான்)

மேற்கூறிய கு, ஐ, ஆன் உருபுகளுள், கு, ஐ என்பன அஃறிணைப் பெயர்களில் நின்று அகரத்தைப் பெறுவதில்லை. ஆன் உருபு மட்டும் அகரம் பெறும்.

(எ.கா) புள்ளியற் கலிமா உடைமையான (உடைமையான்)

## நான்காம் வேற்றுமை உருபு ஏற்கும் பல பொருள்கள்:

- ஒன்றற்குரிய பொருள் இத்தன்மை உடையது எனக் கூறும் ஆறாம் வேற்றுமைப் பொருள்.
  (எ.கா) யானைக்குக் கோடு கூரிது - யானையது கோடு கூரிது (அது)
- ஒன்றை ஒன்று ஏற்றுக் கொள்ளும் இரண்டாம் வேற்றுமைப் பொருள்.
  (எ.கா) இவளுக்குக் கொள்ளும் இவ்வணி - இவளைக் கொள்ளும் இவ்வணி (ஐ).
- ஒன்றனால் ஒன்று தொழில் நிகழ்வதற்கு ஏதுவாய் வரும் மூன்றாம் வேற்றுமைப் பொருள்.
  (எ.கா) அவனுக்குச் செய்யத்தகும் அக்காரியம் - அவனால் செய்யத்தகும் அக்காரியம் -(ஆல்)
- உறவு முறைப் பெயரின் ஆறாம் வேற்றுமைப் பொருள்.
  (எ.கா) ஆவிற்குக் கன்று - ஆவினது கன்று -(அது)
- நிலத்தை வரையறுத்துக் கூறும் ஐந்தாம் வேற்றுமைப் பொருள்.
  (எ.கா) கருவூர்க்குக் கிழக்கு - கருவூரின் கிழக்கு - இன்
- பண்பை அடிப்படையாகக் கொண்டு ஒப்புமை கூறப்படும் ஐந்தாம் வேற்றுமைப் பொருள்.
  (எ.கா) சாத்தற்கு நெடியன் - சாத்தனின் நெடியன் -(இன்)
- காலத்தை உணர்த்தும் ஏழாம் வேற்றுமைப் பொருள்
  (எ.கா) வேனிற்கு வந்தான் - வேனிற்கண் வந்தான் -(கண்)

• பற்றுவிடுதல் • தீர்தல் எனும் ஐந்தாம் வேற்றுமைப் பொருள்கள்

(எ.கா) மனை வாழ்க்கைக்குப் பற்று விட்டான் - மனை வாழ்க்கையின் பற்று விட்டான் (இன்)

ஊருக்குத் தீர்ந்தான் - ஊரின் தீர்ந்தான் - (இன்)

ஆகியனவும் இவை போன்ற பிறவும் நான்காம் வேற்றுமை உருபினை ஏற்று வருவது தொன்று தொட்டே பின்பற்றப்படும் மரபாகும்.

## பிற உருபுகள் மயங்குதல்:

நான்காம் வேற்றுமை உருபைப் போல பிற உருபுகளும் பொருள் சிதையாமல் மயங்கிவரும். அவ்வாறு வருவது குற்றமற்றதாகும்.

(எ.கா) நூலது குற்றம் கூறினான் - நூலைக் குற்றம் கூறினான். (அது - ஐ)

## தொழில் முதல் நிலைகள்

ஒரு செயல் நிகழ்வதற்கு அடிப்படையான காரணம் தொழில் முதல்நிலை எனப்படும். ஒரு தொழில் நிகழ்வதற்கு,

1. வினை, 2. வினைமுதல், 3. செயப்படுபொருள், 4. நிலம், 5. காலம், 6. கருவி என்பவற்றோடு, 7. இன்னதற்கு, 8. இதுபயன் எனும் இரண்டையும் சேர்த்துத் தொழில் முதல் நிலைகள் எட்டாகும் என்பர். (எ.கா) வனைந்தான்.

கூறப்பட்ட தொழில் முதல் நிலைகள் எட்டும் அல்லா வினையாலும் பொருந்தி வருவதில்லை. உலக வழக்கில் சில குறைந்தும் வரும்.

(எ.கா) காற்று வீசிற்று. இதில் செயப்படுபொருள், ஏற்பது, பயன் ஆகியவை இல்லை.

## ஆகுபெயர்

ஒன்றன் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குத் தொன்று தொட்டுப் பெயராகி வருவது ஆகுபெயர் எனப்படும். ஒன்று மற்றொன்றிற்கு ஆகி வருவதால் ஆகுபெயர்.

## ஆகுபெயரின் வகைகள்

1. முதலாகு பெயர் - முதற்பொருளின் பெயர் சினைப் பொருளுக்கு ஆகிவருவது.
(எ.கா) கடுத் தின்றான், தெங்கு தின்றான்.

2. சினையாகு பெயர் - சினைப்பொருளின் பெயர் முதற்பொருளுக்கு ஆகிவருவது.
(எ.கா) வெற்றிலை நட்டான்

3. இடவாகு பெயர் - ஓர் இடத்தின் பெயர் அங்குள்ள பொருளுக்கு ஆகிவருவது.
(எ.கா) காஞ்சிபுரம் உடுத்தினாள்.

4. பண்பாகு பெயர் - ஒரு பண்பின் பெயர் அப்பண்புடைய பொருளுக்கு ஆகி வருவது.
(எ.கா) நீலம் சூடினாள்.

5. காரண ஆகுபெயர் - ஒன்றற்குக் காரணமாய் அமைந்த பெயர் அதனால் ஆகிய காரியத்திற்கு ஆகி வருவது. (எ.கா) இக்குடம் பொன்.

6. இருபெயரொட்டு ஆகுபெயர் - அன்மொழிப் பொருள் மேல் இருபெயரொட்டாய் வரும் (எ.கா) பொற்றொடி வந்தாள்.

7. கருத்தாவாகுபெயர் - செய்தவனின் பெயர் அவனால் செய்யப்பட்ட பொருளுக்கு ஆகி வருவது. (எ.கா) வள்ளுவரைக் கற்றேன்.

மேற்கூறப்பட்ட ஆகுபெயர்கள், தம்மோடு உறவுடைய பொருளோடு சேர்ந்து வருதல், தம்மோடு இயைபல்லாத வேறு பொருள்களுடன் சேர்ந்து வருதல் எனும் இரு பண்புகளை உடையனவாகும்.
(எ.கா) புளி தின்றான், காஞ்சிபுரம் சிறந்தது.

அளவுப் பெயரும், நிறைப்பெயரும் ஆகுபெயராய்க் கொள்வதற்கு உரியன என்று உயர்ந்தோர் கூறுவர்.
(எ.கா) இந்நெல் பதக்கு -(முகத்தல்), இப்பொன் தொடி -(நிறுத்தல்)

முற்கூறப்பட்டவை தவிர, இவைப் பற்றி வேறு பெயர்களும் ஆகுபெயர்களாக வரும் அவற்றை மேற்கூறிய இலக்கணத்தைக் கொண்டு ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
(எ.கா) யாழ் கேட்டான் - கருவி ஆகுபெயர்.
பாவை வந்தாள் - உவமை ஆகுபெயர்.

---

வினாக்கள்:

1. கருமமல்லாச் சார்பு என்றால் என்ன?
2. முதல், சினைப் பொருள்களில் மயங்கும் வேற்றுமைகள் யாவை?
3. பண்டப்பெயர் என்றால் என்ன?
4. ஒருவனை ஒருசொல் உயர்பான் வழிந்தே - விளக்குக.
5. நோக்கல் பொருளில் மயங்கும் உருபுகள் யாவை?
6. ஆறாம் வேற்றுமை உயர்திணைத் தொகையை விரிக்கும் முறை யாது?
7. தடுமாறு தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.
8. ஓம்படைக் கிளவியால் மயங்கும் உருபுகள் யாவை?
9. வாழ்ச்சிக் கிழமையால் மயங்கும் உருபுகள் யாவை?
10. இத்தொக வருஉம் கொடையெதிர் கிளவி என்றால் என்ன?

11. அச்சக் கிளவிக்குரிய உருபுகளைக் குறிப்பிடுக.

12. ஈற்றில் மறைந்து நிற்கும் உருபுகளைச் சுட்டுக.

13. செய்யுளில் அகரம் பெற்றுத் திரியும் உருபுகள் யாவை?

14. வேற்றுமை மயக்கத்தின் வகைகளை எடுத்துக்காட்டுத் தந்து நிறுவுக.

15. நான்கன் உருபால் தோன்றும் பல உருபுகளை விளக்குக.

16. தொழில் முதல் நிலைகளைச் சான்று தந்து விளக்குக.

17. பொருள் மயக்கம் குறித்து கட்டுரை வரைக.

18. ஆகுபெயரின் பாகுபாடுகளைத் தொல்காப்பியர் வழி நின்று விளக்குக.

— x —

# 4. விளிமரபு

விளித்தல் என்றால் அழைத்தல் என்று பொருள். படர்க்கை இடப்பொருளைத் தனக்கு முன்னிலையாக அழைப்பதால் வழங்கப்படும் பொருள் எட்டாம் வேற்றுமை ஆயிற்று. சேய்மை விளியின் போது பெயர்கள் ஈறுதிரிதல், ஈற்றயல் நீளுதல், பிறிது வந்தடைதல், இயல்பாதல் எனப் பல மாற்றங்களை அடையும். இவ் விளியின் இயல்பினை எடுத்துரைப்பது விளிமரபு எனும் இயலாகும்.

விளி என்று சொல்லப்படும் எட்டாம் வேற்றுமை, தம்மை ஏற்றுக் கொள்ளும் பெயரோடு வெளிப்பட்டுத் தோன்றும் இயல்பினை உடையது. விளி ஏற்கும் பெயர்களும், விளி ஏற்காத பெயர்களும் இவை என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டுத் தெளிவாக இவ்வியலில் கூறப்படுகின்றன.

## விளி ஏற்கும் உயர்திணைப் பெயர்கள்:

இ, உ, ஐ, ஓ எனும் எழுத்துக்களை இறுதியில் உடைய உயர்திணைப் பெயர்கள் விளி ஏற்கும்.
(எ.கா) அடர்த்தொடி – அடர்த்தொடீ, வேந்து – வேந்தே, நங்கை – நங்காய், கோ – கோவே
விளி ஏற்கும் போது இகரம் ஈகாரமாகும். ஐகாரம் ஆய் ஆகும்.
(எ.கா) நம்பி – நம்பீ, நங்கை – நங்காய்.
ஓகார ஈறும், உகர ஈறும் ஏகாரத்தைப் பெறும். விளியேற்கும் எனக் கூறப்பட்ட உகரம் குற்றியலுகரம் ஆகும். முற்றியலுகரம் சிறுபான்மையே விளியேற்கும்.

## விளியேற்காத உயர்திணைப் பெயர்கள்!

இ, உ, ஐ, ஓ தவிர்த்த ஏனைய எட்டு உயர் ஈறுகளும் உயர்திணையில் விளி கொள்வதில்லை. மேற்கூறிய எழுத்துக்கள் விளியேற்காது என்றாலும், சொல்பவனின் குறிப்பினால் விளியேற்பனவும் உண்டு. (எ.கா) மக – மகவே.

## அளபெடையில் இகரம்!

இகர ஈற்றுப் பெயர்கள் அளபெடையில் மூன்று மாத்திரையாயிருந்து மிகுந்து நான்கு மாத்திரையாக ஒலிக்கும். அப்போது ஈகாரமாகத் திரியாமல் இயல்பாய் நின்று விளி ஏற்கும்.
(எ.கா) தொழீஇ – தொழீஇஇ (தொழில் செய்பவள்)

## ஐகார ஈற்று முறைப்பெயர்!

ஐகாரத்தை இறுதியாக உடைய முறைப்பெயர்கள் விளியேற்கும் போது ஆய் எனத் திரியாமல் ஆ – எனத் திரிந்து வரும்.
(எ.கா) அன்னை – அன்னா, அத்தை – அத்தா.

## உயிரீறுகள் அண்மை விளி பெறுதல்!

இ, உ, ஐ, ஓ எனும் நான்கு உயிரீற்றுச் சொற்களும் அருகில் உள்ளவரை அழைக்க (அண்மை விளி) ஏற்கும் போது இயல்பாய் நிற்கும். (எ.கா) நம்பி வாழி!, வேந்து வாழி!, விடலை வாழி!, கோ வாழி!

## மெய்யீறுகள்:

ன், ர், ல், ள் எனும் இறுதியை உடைய உயர்திணைப் பெயர்கள் விளி ஏற்கும். ஏனைய மெய்யீற்றுப் பெயர்கள் (ஞ், ண், ந், ம், ய், வ், ழ்) விளி ஏற்பதில்லை.

## னகர ஈற்றுப் பெயர்கள்:

- னகர ஈறு அன் என நிற்கும். அதில் உள்ள னகரம் கெட்டு அகரம் 'ஆ' எனத் திரியும். (எ.கா) சோழன் – சோழா.
- னகர ஈறு அண்மை விளியில் னகரம் கெட்டு அகரமாகத் திரியும். (எ.கா) முருகன் – முருக.
- ஆன் எனும் னகர ஈறு விளியேற்கும் போது இயல்பாய் நிற்கும். (எ.கா) மலையமான் – சேரமான்.
- ஆன் ஈற்று வினையாலணையும் பெயர் விளி ஏற்கும் போது ஆன் என்பது ஆய் எனத் திரியும். (எ.கா) வந்தான் – வந்தாய்.
- ஆன் ஈற்றுப் பண்புப் பெயரும் விளியேற்கும் போது, வினையாலணையும் பெயரைப் போலவே ஆய் எனத் திரியும். (எ.கா) கரியான் – கரியாய்.
- ஆன் ஈற்று அளபெடைப் பெயர்கள் இகர ஈற்று அளபெடைப் பெயரைப் போல மூன்று மாத்திரையில் நீண்டு இயல்பாய் நின்று விளியேற்கும். (எ.கா) உழாஅன்.
- னகர ஈற்று உறவுப் பெயர்கள் ஏகாரம் பெற்று விளி ஏற்கும். (எ.கா) மகன் – மகனே, மாமன் – மாமனே.

## விளியேற்காத னகர ஈற்றுப் பெயர்கள்!

தான், அவன், இவன், உவன், யான், யாவன் என்னும் பெயர்கள் விளி ஏற்பதில்லை.

## ரகர ஈற்றுப் பெயர்கள்!

- ஆர், அர் எனும் இறுதியை உடைய பெயர்கள் ஈர் எனத் திரிந்து விளி ஏற்கும். (எ.கா) பார்ப்பார் – பார்ப்பீர், கூத்தர் – கூத்தீர்.
- ஆர், அர் எனும் ஈற்று வினையாலணையும் பெயர்கள் விளியேற்கும் போது ஈர் எனும் ஈற்றுடன் 'ஏ' காரத்தையும் பெறும். (எ.கா) வந்தார் – வந்தீரே, சென்றார் – சென்றீரே.

• ஆர், அர் ஈற்றுப் பண்புப்பெயரும் ரகர ஈற்றுத் தொழிற்பெயரைப் போல ஏ எனும் ஈற்றுடன் ஈகாரம் பெற்று விளி ஏற்கும். (எ.கா) கரியார் - கரியீரே. இளையர் - இளையீரே.

• ரகர ஈற்று அளபெடைப்பெயர்கள் னகர ஈற்று அளபெடைப் பெயரைப் போல மூன்று மாத்திரையில் மிகுந்து இயல்பாய் விளியேற்கும். (எ.கா) சிறாஅர் - சிறாஅர்.

விளியேற்காத ரகர ஈற்றுப் பெயர்கள்:

• ரகர ஈற்றுச் சுட்டுப் பெயர்கள் னகர ஈற்றுச் சுட்டுப்பெயரைப் போல விளியேற்பதில்லை.

• நும் என்பதன் திரிபாகிய நீயிர், வினாவின் திரிபாகிய யாவர் எனும் இரு ரகர ஈற்றுப் பெயர்களும் விளி ஏற்பதில்லை.

லகர, ளகர ஈற்றுப் பெயர்கள்:

• லகர, ளகர மெய்யீற்றுப் பெயர்கள் விளி ஏற்கும் போது ஈற்றயல் எழுத்து நீண்டொலிக்கும். (எ.கா) குரிசில் - குரிசீல், மக்கள் - மக்காள்.

• ஈற்றயல் எழுத்து நெடிலாக அமைந்த லகர, ளகர ஈற்றுப்பெயர்கள் விளியேற்கும் போது இயல்பாகும். (எ.கா) திருமால், பெருமாள்.

• ஆள் என்பதை ஈற்றில் உடைய வினையாலணையும் பெயரும், பண்புப்பெயரும் ஆய் எனத் திரிந்து விளி ஏற்கும். (எ.கா) நின்றாள் - நின்றாய்.

• ளகர ஈற்று முறைப்பெயர்கள் விளி ஏற்கும் போது, னகர ஈற்று முறைப் பெயரைப் போல ஏகாரம் பெறும். (எ.கா) மகள் - மகளே.

விளி ஏற்காத ளகர ஈற்றுப் பெயர்கள்:

அவள், இவள், உவள், யாவள் என்பன விளி ஏற்பதில்லை.

லகர, ளகர ஈற்று அளபெடைப் பெயர்கள் விளியேற்றல்:

லகர, ளகர ஈற்று அளபெடைப் பெயர்கள் ஏற்கனவே உரிய அளபெடைப் பெயர்களைப் போல மூன்று மாத்திரை நீண்டு இயல்பாய் விளியேற்கும். (எ.கா) மாஅல் - மாஅல், வேண்மாஅள் - வேண்மாஅள்.

திணை விரவுப் பெயர்கள் விளியேற்கும் முறை:

இ, உ, ஐ, ஊ எனும் உயிரீறுகளும் ன், ர், ல், ள் எனும் மெய்யீறுகளும் உயர்திணைக்கு உரியன. இவ் ஈற்றுப்பெயர்கள் அஃறிணையாகவும் விரவி வரும். அப்போது உயர்திணைக்குக் கூறப்பட்ட விதிகளின்படியே விளியேற்கும்.

(எ.கா) சாத்தி - சாத்தீ, பூண்டு - பூண்டே, தந்தை - தந்தாய் → உயிரீறு.

சாத்தன் - சாத்தா, கூந்தல் - கூந்தால், மக்கள் - மக்காள் → மெய்யீறு.

## அஃறிணைப் பெயர்கள் விளி ஏற்றல்!

மெய்யீற்று, உயிரீற்று அஃறிணைப் பெயர்கள் அனைத்தும் விளியேற்கும் போது இறுதியில் ஏகாரம் பெறும்.
(எ.கா) மரம் - மரமே, நரி - நரியே.

## சேய்மை விளியின் இயல்பு!

உயர்திணையாயும் அஃறிணையாயும் விளி ஏற்பனவாகச் சொல்லப்பட்ட பெயர்கள் எல்லாம் சேய்மையில் உள்ளவற்றை விளிக்கும் போது தமக்குரிய மாத்திரை அளவில் மிகுந்து ஒலிக்கும் இயல்பினை உடையன ஆகும்.
(எ.கா) நம்பீஇ, சாத்தாஅ.

## அம்ம எனும் அசைச்சொல்!

அம்ம எனும் அசைச்சொல்லின் நீட்டமாகிய அம்மா என்பது விளி ஏற்கும் பெயராய் வராது. எனினும் அச்சொல் இடைச்சொல்லுடன் வரும்போது விளியாக ஏற்றுக் கொள்வர். (எ.கா) அம்ம சாத்தா - அம்மா சாத்தா.

## விளியேற்காத உயர்திணைப் பெயர்கள்!

த, ந, நு, எ என்னும் எழுத்துக்களை முதலாயும் ன், ர், ள் எனும் மெய்களை இறுதியாயும் கொண்ட முறைப் பெயர்களும், இவை போன்ற பிறபெயர்களும் விளியேற்பதில்லை.
(எ.கா) த - தமன், தமர், தமள்; ந - நமன், நமர், நமள்; எ - எமன், எமர், எமள்; நு - நுமன், நுமர், நுமள்; பிற - பிறன், பிறர், பிறள்.

---

## வினாக்கள்:

1. விளியேற்கும் உயிரீறுகள், மெய்யீறுகள் யாவை?
2. இ ஈ ஆகும் ஐ ஆய் ஆகும் - சான்று தருக.
3. அண்மைச் சொல் எவ்வாறு விளி கொள்ளும்.
4. ஆன் என் இறுதி இயற்கையாவதற்குச் சான்று தருக?
5. மெய்யீற்று முறைப்பெயர்க் கிளைகள் எவ்வாறு விளியேற்கும்?
6. ளகர ஈற்றில் விளியேலாப் பெயர்கள் யாவை?
7. விளியேற்கும் அசைச்சொல் யாது?
8. விளியேற்கும் பெயர்களைச் சான்று தந்து நிறுவுக.
9. விளியேலாப் பெயர்கள் பற்றி நீவிர் அறிவன யாவை?
10. உயர்திணைப் பெயர்கள் விளியேற்றலைச் சான்று தந்து நிறுவுக.

— x —